**சிறிய தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சிறிய தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ‘‘அதிகாரசபை’’ 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை / தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | தொடர்புடைய நியமங்களுடனான இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 01 இன் 76(இ) பந்தியின் பிரகாரம் அறிக்கையிடும் திகதியின் பின்னர் 12 மாதங்களினுள் தீர்வையாகும் என எதிர்பார்க்கும் சொத்துக்கள் நடைமுறை சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா.59,629,115 தொகையான ஒருவருட காலத்தில் முதிர்வடையும் நிலையான வைப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை அல்லாத | நிறுவனத்திற்கு சொந்தமாக காணப்பட்ட ஏழு நாள் வைப்புகள் மும்மாத நிலையான வைப்புக்களாக மாற்றுதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு பரிந்துரையின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. கடந்த வருடங்களின் நிலையான வைப்புக்கள் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் முதலீட்டு தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் வரைபு கணக்காய்வு | நியமத்திற்கமைய நிதிக்கூற்றுகளில் நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் உரிய முறையில் வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | அறிக்கையின் பரிந்துரைக்கமைய 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் நடைமுறை சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தி சமர்ப்பிப்பதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 100 ஆம் பந்தியின் பிரகாரம் திட்டவட்டமாக மதிப்பீடு செய்ய முடியாத நிகழத்தக்க பொறுப்புகளுக்கான ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படக் கூடாத போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதியில் உச்ச நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் தொழில் நியாய சபைகளில் விசாரணை செய்யப்பட்டவாறு காணப்படும் வழக்கு நடவடிக்கைகளுக்கு உரிய நிகழத்தக்க பொறுப்புகளுக்காக ரூபா.4,605,250 ஆன நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே நியமத்தின் 103 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிகழத்தக்க பொறுப்புக்களை அளவீடு செய்வதற்கு வெளிவாரி மதிப்பீட்டாளர்கள் பயன்படுத்தப்பட்டால் அத்தகவல்களும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 08 இன் 103 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபைக்கு எதிராக நடாத்தப்படும் வழக்கு நடவடிக்கைகளுக்கு உரிய நிகழத்தக்க பொறுப்புக்களை மதிப்பீடு செய்வதற்கு வெளிவாரி மதிப்பீட்டாளர் ஒருவர் ஈடுபடுத்தப்பட வேண்டியமை குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே எதிர்வரும் நிதிக்கூற்றுகளில் நிகழத்தக்க பொறுப்புக்களை திட்டவட்டமாக இனங்கண்ட பணிகளுக்கு சீராக்குவதற்கும் நிச்சயமற்ற நிகழத்தக்க பல பொறுப்புக்களை குறிப்புகள் மூலம் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | திட்டவட்டமாக மதிப்பீடு செய்ய முடியாத நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பில் நியமத்திற்மைய குறிப்புகள் மூலம் வெளிப்படுத்த வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தற்காலிக, அமைய, நாளாந்த மற்றும் பதிலீட்டு அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்காக 2019 டிசம்பர் 01 ஆம் திகதி வழங்கப்பட்ட நியமனங்கள் இழக்கப்பட்டமைக்கு | தற்காலிக, அமைய, நாளாந்த மற்றும் பதிலீட்டு அடிப்படையின் கீழ் இணைத்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களை செயற்பாட்டில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களாக உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு | நிலுவை சம்பளங்களுக்காக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிராக தொழில் அலுவலகங்களில் தொடுக்கப்பட்டிருந்த முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டதன் பின்னர் ரூபா.2,167,236 கூட்டுத்தொகையான நிலுவை சம்பளத்தை செலுத்துமாறு மாவட்ட தொழில் அலுவலகங்களினால் 2020, 2021 மற்றும் 2022 ஆகிய வருடங்களில் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் மூன்று கட்டளைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அதற்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் அது தொடர்பில் நிதிக்கூற்றுகளிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த ஊழியர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும் குறித்த நபர்களால் தொழில் அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை விசாரித்தமையின் மூலம் குறித்த நபர்களுக்கு ரூபா.2,167,236 ஆன நிலுவைச் சம்பளத்தை செலுத்துமாறு குறிப்பிடப்பட்டமையின் அடிப்படையில் நிறுவனத்தினால் செயற்பாட்டில் உள்ளவர்களுக்கான நியமனங்களுக்காக நிலுவை சம்பளத்தை செலுத்தும் இயலுமை காணப்படாததால் இதற்கு பொறுப்பு கூறவேண்டிய உத்தியோகத்தர்கள் யார் என்பது தொடர்பில் அமைச்சின் ஆலோசனையின் அடிப்படையில் உள்ளக விசாரணையொன்று இடம்பெற்றவாறு உள்ளது. அதனால் நிதிக்கூற்றுகளில் ஏற்பாடுகள் ஒதுக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) | செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு நடமாடும் சேவை வாகனம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கும் டிஜிட்டல் செயற்திட்ட தொடர்பாடல் மற்றும் கண்காணிப்பு அலகு ஒன்றினை நிறுவுவதற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா.9,900,000 ஆன மூலதன செலவினங்கள் வருமான செலவினங்களாக கருதி நிதிசெயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டில் மிகை மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் அந்த அளவினால் குறைத்து நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | விவசாயிகளை தொடர்புகொள்ளும் புதிய மூலோபாயங்களை நோக்கிய டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் கொள்கையின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் பரிந்துரைகளின் ஊடாக இனங்காணப்பட்டிருந்ததுடன் அதற்காக நிறுவன நடவடிக்கைகள் அந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த அபிவிருத்தி மூலதனத்தின் கீழ் செயற்திட்ட செலவினங்களின் நிதி செயன்முன்னேற்றத்தின் ஊடாக சீராக்கப்பட்ட போதிலும் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் முன்னோக்கிய சீராக்கங்களின் கீழ் திருத்தப்பட்டு மூலதனமாக்குவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | மூலதன செலவினங்கள் நிதி செயலாற்றல் கூற்றிற்கு உள்ளடக்கப்படாது மூலதனம் ஆக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் ரூபா.73,907,078 தொகையாக நிதிநிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த காணிகளின் பெறுமதியினுள் அதிகாரசபைக்கு சொந்தமாக சுவீகரிக்கப்படாத அரச, காணி மறு சீரமைப்பு ஆணைக்குழு, மகாவலி அதிகாரசபை போன்ற நிறுவனங்களுக்கு உரித்தான ரூபா.35,091,728 தொகையான 66 ஏக்கர்கள் 31 ரூட் பரப்பளவான காணி உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இக்காணி தொடர்பில் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் காணிகளின் சட்டரீதியான உரித்து அதிகார சபைக்கு சுவீகரிக்கப்பட்டிராத நான்கு பிரதேச அலுவலகங்களின் ரூபா.71,856,901 பெறுமதியான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. | மகாவலி அதிகாரசபை, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் அரசுக்கு உரித்துடைய ஏனைய நிறுவனங்களிலிருந்து அதிகாரசபைக்கு கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு சுமார் ஒருவருட காலத்திற்கு முன்னர் இணக்கப்பாட்டு கடிதங்கள் மற்றும் ஏனைய புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் அடிப்படையில் காணிகள், ஆதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த கட்டிடங்கள் இதற்கு பல வருடங்களுக்கு முன்னர் அதாவது அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் வழங்கப்பட்டுள்ளதுடன் இதுவரையிலும் அதிகாரசபையினால் செலவினம் மேற்கொள்ளப்பட்டு அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த ஆதனங்களை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதுடன் ஆதனங்களின் உரித்து தற்போது அதிகாரசபைக்கு கிடைத்துள்ளது. | காணியின் உரித்தினை துரிதமாக அதிகாரசபைக்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் ரூபா.5,089,972 தொகையான வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய ரூபா.1,221,593 தொகையான வருமானவரி பொறுப்போ நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானவரி திணைக்களத்திற்கு உழைக்கும் போதே செலுத்தும் வரியினை செலுத்துவதற்கு வருமானம் ஈட்டுபவர் பொறுப்பு கூற வேண்டிய போதிலும் அரச நிறுவனம் ஒன்றாக (திறைசேரியின் ஈட்டத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்) எமது நிறுவனத்தில் வருமானம் ஈட்டும் நடைமுறைகள் இல்லாமையாலும் இதுவரையிலும் வரி செலுத்துதல் இடம்பெறவில்லை. எனினும் தங்களின் பரிந்துரைக்க அமைய வட்டி வருமானத்தின் அடிப்படையில் வரி செலுத்துவதற்கு எதிர்காலத்தில் அதாவது 2022 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வருமானவரி தொகையை கணிப்பிட்டு கணக்கு வைக்க வேண்டும். |
| (உ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் தேயிலை பயிற்செய்கைக்கு கிளைபோசிட் பகிர்ந்தளிப்பதற்குரிய | கிளைபோசிட் பகிர்ந்தளிப்பதற்குரிய செலவினத்தின் கீழ் எஞ்சிய பணத்தொகை மற்றும் நுண்ணுயிர் பாதுகாப்பு | குறித்த பணியின் இறுதியில் எஞ்சிய நிதியேற்பாட்டை திறைசேரிக்கு அனுப்புவதற்கு |

| | | |
|---|---|---|
| நானாவித செலவினத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் எஞ்சியிருந்த ரூபா.3,980,066 மற்றும் தேயிலை பயிற்செய்கையின் நுண்ணுயிர் பாதுகாப்பிற்கான விவசாயிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட மானியத் தொகையில் குறித்த காசோலைகளின் தீர்வையாகாத பெறுமதியாக ரூபா.3,937,038 தொகை 2014 ஆம் ஆண்டு முதல் பொறுப்பொன்றாக நிதிக்கூற்றுகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் குறித்த பணி நிறைவடைந்து கணக்குகளில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மானியங்களுக்கு விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த கொடுப்பனவுகளுக்கு சமர்ப்பிக்கப்படாத அளவினாலும் நிதக்கூற்றுக்களில் பொறுப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றேன். அந்த தொகை எதிர்காலத்தில் சிறு தேயிலை உடைமையாளர்களின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட செயற்திட்டம் ஒன்றை தயாரித்து அமைச்சின் பரிந்துரையுடன் திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | அல்லது திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் குறித்த செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

அனைத்து இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள் தொடர்பிலான அவதானிப்புகள் இதன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | **விடயம்** | **நிதிககூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி** | **தொடர்புடைய அறிக்கையின் பிரகாரம் பெறுமதி** | **வேறுபாடு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | | |
| (அ) | பல்வேறு இருப்புக்கள் | **11,353,013** | **4,014,660** | **7,338,353** | பல்வேறு இருப்புக் கணக்கு மீதிகள் மற்றும் பௌதீக மீதிகள் ஆகியவற்றுக்கு இடையே வேறுபாடுகள் இனங்காணபட்டன. அதற்கமைய சீராக்க அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது. இனங்காணப்பட்ட வேறுபாட்டுக்கான காரணங்கள் 2022 | இருப்பு மீதியை சரியாக சீராக்கி கணக்கு வைக்க வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | நிதிக்கூற்றுகளில் சீராக்குவதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) | பிரதேச அலுவலகங் களில் கடன்பட்டோர் மீதிகள் | **7,312,558** | **2,734,862** | **4,577,696** | இதன் பின்னர் அனைத்து பிரதேச அலுவலகங்களிலும் தனித்தனியாக கடன்பட்டோர் மீதிகளை பதிவு செய்வதற்கு எழுத்து மூலமான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பிரதேச அலுவலகங்க ளின் கடன்பட்டோர் மீதிகள் நிதிக்கூற்றுக் களை தயாரிக்கும் போது சரியாக சீராக்கப்பட வேண்டும். |

**1.6 பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1998 ஆம் ஆண்டில் உர கடன் முன்மொழிவு முறைமையின் கீழ் உரம், திரவம் தெளிக்கும் இயந்திரம் மற்றும் தராசு போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்கு சிறு தேயிலைத் தோட்ட சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக பெறவேண்டிய கடன் மீதியான ரூபா.4,374,289 தொகை 22 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1998 ஆம் ஆண்டு வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் முறைமையின் கீழ் சிறு தேயிலை தோட்ட சங்கங்களுக்கு வழங்கப்பட்ட உரம், திரவம் தெளிக்கும் இயந்திரம் மற்றும் தராசு ஆகியவற்றுக்காக அறவிடப்பட வேண்டிய அளவுகள் இணைக்கச்சபைக்கு முன் வைக்கப்பட்டு அறவிடப்பட்டு தொடர்ந்தும் அறவிடுவதற்குள்ள தொகை ரூபா.4,374,289 ஆகும். தொடர்ந்தும் அறவிட முடியாத 22 வருடங்கள் பழமையான கடனை பதிவளிப்பதற்கு உரிய அங்கீகாரம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அங்கீகரிக்க முடியாமையை தெரிவித்துக் கொள்கின்றேன். | பொறுப்பு கூறவேண்டிய தரப்பினர்களிடமி ருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ | 1998 ஆம் ஆண்டு நிறப் பிரிகை இயந்திரத்தினை வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் மூலம் தனியார் தேயிலை தொழிற்சாலைகள் நான்கிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா.5,916,589 ஆன கடன் தொகை 2016 ஆம் | 1998 ஆம் ஆண்டு தேயிலை தொழிற்சாலைகளுக்காக புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு நிறப்பிரிகை இயந்திரத்தை கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள் 04 தொழிற்சாலைகளில் இருந்து தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய பணத்தில் ஈரியகஹ | கடனை அறவிடுவதற்குரி ய நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்ப ட வேண்டியத்துட ன் மூடப்பட்ட தொழிற்சாலைக |

| | | |
|---|---|---|
| ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிட முடியாதிருந்தது. ஈரியகஹ தேயிலை தொழிற்சாலை மாத்திரம் கடனை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது. | தொழிற்சாலையில் இருந்து அறவிடப்பட வேண்டிய பணத்திற்கு சட்ட நடவடிக்கை எடுத்தமையின் மூலம் ரூபா.2,436,448 ஆன தொகையினை அறவிடுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். அவ்வாறே காலி கூட்டுறவு சங்கத்தின் சொத்துக்களை கலைத்தமையின் பின்னர் பொறுப்புக்களை விடுவிக்கும் போது அதிகாரசபைக்கு பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு முன்னுரிமை வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சிய 2 தேயிலை தொழிற்சாலைகளை மூடியிருந்த காரணத்தால் பணத்தை அறவிடுவதற்கு முடியாத நிலை உள்ளாகியுள்ளமையை தெரிவித்துக் கொள்கின்றோம். | ள் தொடர்பில் விசேட குழு ஒன்றின் மூலம் தொடர்ந்து பரீட்சித்து பொருத்தமான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்கத்திற்காக 1998 ஆம் ஆண்டில் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 23 வாகனங்களை விற்றமையால் கிடைத்திருந்த ரூபா.9,155,483 ஆன தொகை மற்றும் மண் பாதுகாப்பிற்காக அதிகார சபையினால் 2020 ஆம் ஆண்டில் நுவரெலிய மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேச அலுவலக அதிகார பிரதேசங்களில் விவசாயிகளுக்கு நிவாரணக் கொடுப்பனவொன்றினை செலுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த தொகையில் எஞ்சிய ரூபா.13,812,613 தொகை 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திறைசேரிக்கு அனுப்பப்படாது கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அதிகாரசபைக்கு சொந்தமான 26 வாகனங்களில் 18 வாகனங்கள் சுமார் 20 வருடங்களை விட பழமையான வாகனங்கள் ஆகும். அதனால் இந்த தொகையை பயன்படுத்தி வாகனங்களை கொள்வனவு செய்ய திறைசேரியின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. மண் பாதுகாப்பு மானியத்தினை செலுத்துதல் அதிகாரசபையின் செயல் நடவடிக்கை திட்டத்தில் காணப்பட்ட நடவடிக்கை ஒன்றானமையால் குறித்த பணம் திறைசேரிக்கு அனுப்பப்படவில்லை. அப்பணத்தை எதிர்காலத்தில் மானியத்தினை செலுத்துவதற்கு பயன்படுத்துவதற்கு நேரும் என்பதை தெரிவித்துக் | எஞ்சிய தொகையை திறைசேரிக்கு அனுப்ப வேண்டியதுடன் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி அந்த பணத்தை செலவிடக்கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்கின்றேன். | |
| (ஆ) 2016 ஆம் ஆண்டில் இரத்தினபுரி பிரதேச அலுவலகத்தில் தேயிலை விவசாயிகளுக்கு உர மானியங்களை வழங்குவதற்கு வழங்கப்பட்ட காசோலைகளின் உரித்து கோராத காசோலைகளின் பெறுமதியான ரூபா.4,972,951 தொகை நிதிக்கூற்றுகளில் கடன்கொடுத்தோரின் கீழ் செலுத்த வேண்டிய மீதிகளாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மானியங்களுக்கு உரித்து கோராத காரணத்தை கண்டறிந்து இந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய பணிகள் சுமார் 05 வருடங்களாக தாமதமடைந்துள்ளன. | 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டம் ஒன்றாகும். இந்த பண ஈட்டம் ரூபா.4,429 மில்லியன் ஆகும். அவற்றுள் உரித்து கோரப்படாத பணத்தின் பெறுமதி 0.1 சதவீதம் மாத்திரம் ஆகும். அரச திறைசேரியின் மூலம் இதனை செலவினம் ஒன்றாக கணக்கு வைக்கப்பட்டுள்ளமையால் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு விசேட செயற்திட்டம் ஒன்றினை தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் திறைசேரிக்கு அறிவித்து செலவினம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | திறைசேரியிலிருந்து கிடைத்த பணத்தின் எஞ்சிய தொகையை திறைசேரிக்கு அனுப்புவதற்கு அல்லது திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வேறு பணிகளுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவையின் நி.பி 371(2)(ஆ) | ஏதேனும் விசேடமான பணி ஒன்றுக்காக பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா.100,000 உச்ச செயல் நிமித்த கட்டுநிதி வழங்க இயலுமானத்துடன் அந்த உச்சத் தொகையை விஞ்சி 5 சந்தர்ப்பங்களில் ரூபா.710,000 ஆன கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன. | மட்டுப்படுத்தப்பட்ட பதவி நிலை உத்தியோகத்தர்களுடன் செயற்படும்போது ரூபா.210,000 ஆன தொகையினால் உச்ச எல்லை விஞ்சப்பட்டுள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் நி.பி 371(2)(ஆ) இன் பிரகாரம் உச்ச எல்லையினுள் செயற்படுவதற்கு குறித்து வைத்துக் | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க முற்பணம் வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கொள்கின்றேன். | |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| (i) | VII அத்தியாயத்தின் 12.3 ஆம் பிரிவு | நிரந்தர பதவி ஒன்றினை வகிப்பவர் கடமையினை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டால் அவருக்கு அந்த பதவிக்கு பதிற்கடைமை அடிப்படையில் நியமிக்கப்பட்டால் அவருக்கு கிடைக்கும் மேலதிக வேதனத்தின் 2/3 ஆன தொகை செலுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 03 பதவிகளின் கடமைகளை நிறைவேற்றும் படிகளாக குறித்த பதவியின் ஆரம்ப சம்பளத்தில் 1/4 ஆன படி செலுத்தப்பட்டிருந்தது. | இவர்களுக்கு படிகளை செலுத்துதல் தொடர்பில் உள்ளக கணக்காய்வோ பரிசோதனையின் பின்னர் வழங்கப்பட்ட பரிந்துரைக்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு விடயங்கள் அறிக்கையிடப்பட்டு ள்ளன. அக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்து வதற்கு பணிப்பாளர் சபைக்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய கடமைகளை நிறைவேற்றும் படிகள் செலுத்தப்பட வேண்டும். |
| (ii) | 11 ஆம் அத்தியாயத்தின் 13.7 ஆம் பிரிவு | வெற்றிடமான பதவி ஒன்றில் கடமைகளை மேவுகை செய்யும் உத்தியோகத்தருக்கு மேலதிக வேதனத்தினை வழங்குவதற்கு உரித்தற்ற போதிலும் ஹந்தான தேசிய பயிற்சி நிலையத்தின் முகாமையாளர் (பயிற்சி) பதவியில் கடமைகளை மேவுகைக்கு முன்னால் நுவரெலிய பிரதேச முகாமையாளர் 2016 நவம்பர் 01 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டு அக்கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவருக்கு நிலையத்திலிருந்து கிடைத்த இலாபத்தின் ரூபா.111,290 ஆன படிகள் 2018 ஏப்ரல் 06 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. | மேற்படி படி உத்தியோகத்தர் கடமை மேவுகைக்கு நியமிக்கப்பட்டு செலுத்தப்பட்ட மேலதிக வேதனம் ஒன்றல்ல என்பதும் முழுமையாக உத்தியோகத்தரை ஊக்குவித்து மதிப்பீடு செய்வதற்கு செலுத்தப்பட்ட ஊக்குவிப்பு படியொன்று மாத்திரம் என்பதனையும் தாழ்மையுடன் சுட்டிக் காண்பிக்கின்றேன். | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய கடமை மேவுகைக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாது என்பதுடன் திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் ஏனைய படிகள் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | பிஈடி/12 ஆம் இலக்கம் மற்றும் 2003 ஜுன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் | கணக்காண்டு நிறைவடைந்து 150 நாட்களின் பின்னர் கணக்காய்விற்கு | 2019 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2022.03.24 ஆம் திகதி மற்றும் 2020 | கணக்காண்டு நிறைவடைந்து 150 நாட்களினால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவு | உட்படுத்தப்பட்ட கணக்குகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மும் மொழிகளிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகள் கணக்காய்வு திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2022.06.16 ஆம் திகதி மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பிஈடி/1/2015 ஆம் இலக்க மற்றும் 2015 மே 25 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2.2 ஆம் பந்தி | மாதாந்த எரிபொருள் படிகளில் போதுமானதாக இல்லாத விசேட சந்தர்ப்பம் ஒன்றில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட மேலதிக எரிபொருள் செலவினத்தை மீளளிப்பு செய்ய இயலுமான போதிலும் அதிகாரசபையின் பொது முகாமையாளரால் 2020 ஆம் ஆண்டு முதல் 2022 மே 26 ஆம் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள ரூபா.516,773 கூட்டுத் தொகையான மேலதிக எரிபொருள் படிகள் தவறுதலாக தலைவரின் அங்கீகாரத்தின் கீழ் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. | 2017.08.01 ஆம் திகதி இடம்பெற்ற 541 ஆவது பணிப்பாளர் சபை பத்திர தீர்மானமாக எதிர்காலத்தில் பொது முகாமையாளருக்கு மேலதிக எரிபொருள் அதிகாரசபையின் தலைவருக்கு அனுப்பி அந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் செலவினங்களை மீளளிப்பு செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய பொது முகாமையாளரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மேலதிக எரிபொருள் படிகளை அதிகார சபையின் தலைவரின் அங்கீகாரத்தின் கீழ் மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் மேலதிக எரிபொருள் செலவினங்கள் மீளளிப்பு செய்யப்பட வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்வேறு கடன்கொடுத்தோர் மீதிகளினுள் உள்ளடக்கப்பட்ட வெள்ள நீர் நிவாரணத்தை செலுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டில் பெருந்தோட்ட அமைச்சிலிருந்து அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் எஞ்சிய ரூபா.9,485,310 தொகை உரிய முறையில் திருப்பி செலுத்துவதற்கோ அல்லது திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஏனைய செலவினங்களை மேற்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்காது கேள்வி வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டில் வெள்ள நீர் இடரிற்கு உள்ளாகிய காணிகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகைகளை செலுத்திய பின் எஞ்சிய தொகை அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மீள்பயிரிடல், புதிதாக பயிரிடல் மற்றும் வெற்றுக்காணிகளுக்கான மானியங்களுக்கு செலுத்தப்பட உள்ளது. அதனால் கணக்குகளில் பதிவு செய்யப்பட்ட ரூபா.9,485,310 ஆன தொகை பெயரளவு பெறுமதி ஒன்று மாத்திரம் என்பதுடன் குறித்த வருடத்தில் சீராக்கள் பதிவுகளை மேற்கொள்ளமையால் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட மீதியொன்றாகும். அதற்கமைய 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரியான முறையில் சீராக்குவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | மானியங்கள் மற்றும் விரிவாக்கல் நடவடிக்கைகளுக்காக கிடைக்கப்பெற்று எஞ்சிய தொரக திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டும். அந்த பணம் திறைசேரியின் அங்கீகாரமின்றி செலவிட முடியாததுடன் நிதிக்கூற்றுகளில் சரியாக சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறு

மீளாய்வாண்டில் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 171,795,953 ஆன மிகையாக உள்ளதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 406,018,644 ஆகும். அதற்கமைய நிதி பெறுபேறில் ரூபா 234,222,691 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நானாவித வருமானம் ரூபா 15,658,009 இனால் குறைவடைந்திருந்தமை மற்றும் அபிவிருத்தி செலவினம் ரூபா 423,950,805 இனால் அதிகரித்திருந்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

கடந்த வருடத்திற்கு ஒப்பாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கிடைத்த அரசமானியம் 27 சதவீதத்தினால் அதிகரித்தும் நானாவித வருமானங்கள் 82 சதவீதத்தினால் குறைவடைந்தும் காணப்பட்டது. உதவு தொகைகள், செயற்திட்டம் மற்றும் மதியுரை சேவைகள் உள்ளடங்களாக நிறுவன அபிவிருத்தி செலவினங்கள் மற்றும் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினம் முறையே கடந்த வருடத்திற்கு ஒப்பாக 56 சதவீதத்தினாலும் 37 சதவீதத்தினாலும் அதிகரித்தமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டினதும் கடந்த வருடத்தினதும் நடைமுறை விகிதம் முறையே 1.64:1 மற்றும் 1.79:1 ஆக காணப்பட்டதுடன் விரைவுச் சொத்து விகிதம் முறையே 1.3:1 மற்றும் 1.27:1 ஆக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத்தின் வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசியக் கொள்கையின் பிரகாரம் உச்ச விளைவினை வழங்கும் தேயிலை பயிற்செய்கை காணியின் அளவினை நிலையாக பேணுவதற்கு வருடம் ஒன்றிற்கு 02 சதவீதம் அதாவது 2,300 ஹெட்டேயர் பரப்பளவான தேயிலை மீள்பயிரிடல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் தேயிலை மீள்பயிரிடுவதற்கு இலக்கிடப்பட்ட காணியின் அளவான 1000 ஹெக்டேயர்களில் மீள் பயிரிடப்பட்ட காணியின் அளவானது 849 ஹெட்டேயர்கள் மாத்திரம் என்பது ஆண்டறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. | தேயிலை மீள்பயிரிடலின் கன்றுகளை நடுவதற்கான தவணை இலக்குகளை நிறுவுவதற்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் தேயிலை மீள்பயிரிடல் காணிகளை தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ள காணியின் அளவினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும். அதற்கமைய 2019 ஆம் ஆண்டில் தரையினை தயாரித்தல் 376 ஹெக்டேயர்களும் 2020 ஆம் ஆண்டில் தரையினை தயாரித்தல் 682 ஹெக்டேயர்களுமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் கன்றுகளை நாட்டுவதற்கு தவணை ஒன்றுக்கு 1058 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணி பற்றாக்குறை ஒன்று காணப்பட்டது. அந்த அளவில் 1000 ஹெக்டேயர்கள் ஆன இலக்கு 2021 ஆம் ஆண்டில் தேயிலை மீள் பயிரிடலின் கீழ் தேயிலை கன்றுகளை நடுவதற்கு இலக்கிடப்பட்டுள்ளது. 151 ஹெக்டேயர்கள் பரப்பளவான செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியாது உள்ளது. எனினும் 2022 ஆம் ஆண்டின் முதல் காலப்பகுதியில் இந்த காணிகளை பரீட்சித்து உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் தற்போது இடம்பெற்றவாறு உள்ளது | தேசியக் கொள்கையின் பிரகாரம் தேயிலை மீள்பயிரிடல் இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 | 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு | இந்த மானிய பெறுநர்களின் தேயிலை |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு கணினி மயப்படுத்தப்பட்ட தகவல்களுக்கமைய 996 ஹெக்டேயர்கள் பரப்பளவான தேயிலை காணிக்காக தேயிலை மீள்பயிரிடல் மானியத்தின் முதலாவது தவணை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இரண்டாவது தவணை வழங்கப்பட்டிருந்தது சுமார் 833 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணிக்கு மாத்திரம் என்பதுடன் இரண்டாவது தவணை மற்றும் மூன்றாவது தவணையைப் பெற்றுக் கொள்ளாத காணியின் பரப்பளவானது 163 ஹெக்டேயர்கள் ஆகும். அதற்கமைய 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் தேயிலை மீள்பயிரிடல் மானிய செலவினம் ரூபா.2,049,289,862 ஆக காணப்பட்டதுடன் சிக்கனமற்ற மானியங்களாக காணப்பட்ட அளவானது ரூபா.295,145,566 ஆகும். அதற்கமைய மொத்த மானிய தொகையில் 14.4 சதவீதம் நோக்கத்திற்கு உரிய முறையில் ஈடுபடுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மானியம் பெறுநர்களின் தேயிலை பயிற்செய்கைக்கு ஈடுபடுத்துவதற்கு அல்லது பணத்தை மீள அறவிடுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தி இருக்கவில்லை. | வரையிலான காலப்பகுதிகளில் தேயிலை மீள் பயிரிடுதல் முதலாவது உதவுத்தொகையின் தவணை 996 ஹெக்டேயர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அந்த அளவானது 4892.34 ஹெக்டேயர்கள் ஆகும். எவ்வாறான போதிலும் ஏதேனும் ஒரு வருடத்தில் இந்த தரையினை தயாரித்தல் நிறைவு செய்யப்படும் காணியின் அளவில் 80 சதவீதம் தேயிலை மீள் பயிரிடல்களுக்கு ஈடுபடுத்தப்படுவதாக கடந்த வருடங்களின் தரவு பகுப்பாய்வில் தெளிவுபடுத்தப்பட்டது. | பயிற்செய்கையில் ஈடுபடுத்துவதற்கு அல்லது பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வெற்றிடமாக காணப்பட்ட 04 பிரதேச முகாமையாளர் பதவிகளை நிரப்புவதற்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மூன்று | அங்கீகரிக்கப்பட்ட திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச முகாமையாளர் பதவிக்கு உள்ளக | நடைமுறையின் ஏற்பாடுகளுக்கு இணங்க மற்றும் உரிய அங்கீகாரங்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் யாருக்கும் |

சந்தர்ப்பங்களில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் நேர்முகப் பரீட்சைகள் சபையினால் புள்ளிகளை வழங்குதல் உரிய முறையில் இடம்பெற்றிராமை, விண்ணப்பங்கள் கோரப்பட்டு 06 மாதங்களை விட அதிக காலம் கடந்திருந்தமை போன்ற விடயங்களின் காரணமாக ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. எவ்வாறான போதிலும் மீண்டும் 2021 ஆகஸ்ட் 04 ஆம் திகதி இடம்பெற்ற நேர்முகப் பரீட்சையில் பிரதேச முகாமையாளர் பதவிக்கு பதவி உயர்த்துவதற்கு பரிந்துரைக்கப்பட்ட பெயர்களுக்கு இராஜாங்க அமைச்சின் அங்கீகாரத்தினை வழங்குவதற்கு 2021 ஆகஸ்ட் 09 ஆம் திகதி முன்வைத்திருந்த போதிலும் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தினை முன்வைக்காமை, நேர்முகப் பரீட்சைகள் சபையின் அங்கத்தவர்கள் திகதியின்றி கையொப்பமிட்டிருந்தமை அல்லது கையொப்பமிட்டிராமை போன்ற விடயங்கள் காரணமாக மீண்டும் அறிக்கை கோரப்பட்டிருந்ததுடன் நியமனம் தொடர்பில் இராஜாங்க அமைச்சின் அங்கீகாரம் 2021 நவம்பர் 05 ஆம் திகதியே கிடைத்திருந்த போதிலும் அமைச்சின் அங்கீகாரத்தினை பொற்றுக் கொள்வதற்கு முன்னர் அதாவது 2021 ஆகஸ்ட் 09 ஆம் திகதி நியமனம் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அமைச்சின் மூலம் முறையான விசாரணை மேற்கொள்ளும் வரையிலும் அதிகாரசபையில் இருந்து அறிக்கை ஒன்றைக் கோரி 2019.08.06 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை சபையின் பரிந்துரைக்கமைய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளுதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. 2020.08.17 ஆம் திகதி கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு உரிய நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதற்கு மூன்று சந்தர்ப்பங்களில் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் தடுக்க முடியாத காரணங்களின் அடிப்படையில் அந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் நேர்முகப் பரீட்சைகளை நடாத்த முடியாதிருந்தது. அண்மிய பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் ஆட்சேர்ப்புக்கான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் நேர்முகப் பயிற்சிகள் சபையின் பரிந்துரை பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கு 2021.08.06 ஆம் திகதி முன்அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அதற்கடுத்த அண்மிய பணிப்பாளர் சபை (2021.08.20) இற்கு சபை பத்திரம் மூலம் அனுப்பப்பட்டு 2021.11.05 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பாதகம் ஏற்படாத வகையில் பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | பிரதேச முகாமையாளர் பதவிகள் 04 இன் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சையில் மேலதிக கல்வித் தகமைகளின் கீழ் தனிப்பட்ட கோவையில் உள்ளடக்கப்பட்டிராத தற்போது நிறுவனத்தில் காணப்படாத சான்றிதழ் பத்திரங்களுக்காக புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தன. | நேர்முகப் பரீட்சையில் நேர்முகப் பரீட்சைகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ் பத்திர பதிவேட்டினை அடிப்படையாகக் கொண்டு புள்ளி வழங்கப்பட்டுள்ளது. | விண்ணப்பதாரிகளுக்கு புள்ளிகளை வழங்குவதற்கு அடிப்படையாகக் கொண்ட சான்றிதழ்கள் அவர்களின் தனிப்பட்ட கோவைகளில் ஆவணப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | 2022 ஜனவரி 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் 2019 ஆம் ஆண்டில் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்ட ரூபா.11,213,888 பெறுமதியான ஹந்தான ரத்னஸ்ரீ விக்ரமநாயக்க தேசிய பயிற்சி மத்திய நிலையத்தின் நுழைவாயில், இருபுற பக்க சுவர்கள் மற்றும் காண்களுக்கு இடப்பட்டிருந்த கொன்கிறீட் உடைந்தும் வெடிப்புகளுடனும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | ஹந்தான பயிற்சி மத்திய நிலையத்தில் பக்க காண்களில் கொன்கிறீட் இடுதல் 2019 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த கொன்கிறீட் கலவை காணின் மேற்புறத்தினை மூடுவதற்கு இடப்பட்டுள்ளதுடன் முன்பூர்த்தி செய்யப்பட்ட கொன்கிறீட் சில காலத்தின் பின்னர் வெடிப்புகள் மற்றும் உடைதல்களுக்கு உள்ளாவதுடன் அது பொதுவான நிலைமையொன்று என்பதால் கம்பிகள் இடப்பட்டுள்ளமையால் அபாயமான நிலைமையொன்று ஏற்படாது. | நியமித்திற்கமைய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை பரீட்சித்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீள் பயிரிடல், புதிதாக பயிரிடல் மற்றும் வெற்றுக் காணிகளில் பயிரிடல் உள்ளடங்களாக மொத்த பயிரிடல் மானியங்களுக்கு 2017 முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் | தேயிலை மீள் பயிரிடல் / புதிதாக பயிரிடல் மற்றும் வெற்று காணிகளில் பயிரிடல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக மானியங்களாக கடந்த வருடத்திற்கு ஒப்பாக 40 | மீள் பயிரிடல், புதிதாக பயிரிடல் மற்றும் வெற்றுக் காணிகளில் பயிரிடல் உள்ளடங்களாக ஒட்டுமொத்த பயிரிடல் |

| | | | |
|---|---|---|---|
| | ஒவ்வொரு வருடமும் ரூபா.500 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையும் கடந்த வருடம் மற்றும் மீளாய்வாண்டில் முறையே ரூபா.737,542,872 மற்றும் ரூபா.1,030,214,720 வழங்கப்பட்டிருந்ததுடன் பூர்த்தி தேயிலை உற்பத்தியின் தேசிய உற்பத்தி பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் 75.5 சதவீதம் முதல் 2021 ஆம் ஆண்டில் 74.56 சதவீதம் வரையிலும் வீழ்ச்சி அடைந்துள்ளதாக ஆண்டறிக்கைக்கமைய அவதானிக்கப்பட்டது. | சதவீதமான தொகையினை வழங்குதல் இடம்பெற்றுள்ளது. எனினும் மீளாய்வாண்டில் தேசிய தேயிலை உற்பத்தியின் பங்களிப்பில் 73.85 சதவீதம் முதல் 74.56 சதவீதம் வரையிலும் 0.76 சதவீதத்தினால் அதிகரித்துள்ளமையை காண்பித்துள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள மானிய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அந்த முதலீடுகளுக்கு உரிய தேயிலை கொழுந்து உற்பத்திக்கு உற்பத்தி அதிகரிப்பு 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளிலிருந்து ஆரம்பிக்கப்படும். | மானியங்களை பயன்படுத்துதல் செயல் திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் இடம்பெற வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சிறு தேயிலை தோட்ட பிரிவில் சராசரி விளைதிறன் ஹெக்டேயர் ஒன்றுக்கு பூர்த்தி தேயிலை கிலோகிராம்கள் 1,241 ஆகக் காணப்பட்டதுடன் அது 2018 ஆம் ஆண்டில் 1,958 கிலோகிராம்களாக காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டு முதல் சராசரி விளைதிறன் கிரமமாக வீழ்ச்சி அடைந்தவாறு காணப்பட்டது. சிறு தேயிலை காணிகளில் விளைதிறனை அதிகரிப்பதற்கு விரிவாக்க மற்றும் மதியுரை சேவைகளுக்கு வருடாந்தம் பெருமளவிலான பணம் செலவிடப்பட்டிருந்த போதிலும் அவற்றில் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள முடியாது இருந்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டின் வரைபு ஆண்டறிக்கையின் பிரகாரம் ஆக்கபூர்வமான விரிவாக்க சேவைகளுக்காக | 2005 ஆம் ஆண்டின் பின்னர் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தயீட்டுடன் தேயிலை காணிகளின் பாதுகாப்பு இடம்பெறவில்லை. எனினும் தேயிலைச் சபை 2018 ஆம் ஆண்டில் மேற்கொண்ட தேயிலை காணிகளின் பதிவிற்கமைய இதுவரையிலும் இனங்காணப்பட்டிருந்த தேயிலை பயிற்செய்கை நிலப்பரப்பின் அளவோ பாரிய அளவில் அதிகரித்தமையின் அடிப்படையில் நிலத்தின் விளைதிறன் குறைவடைந்துள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | சிறு தேயிலைத் தோட்ட பிரிவின் சராசரி விளைதிறனை அதிகரிப்பதற்கு விரிவாக்க மற்றும் மதியுரை சேவைகளை விரிவாக்க வேண்டியதுடன் மனித வளத்தினை உச்ச மட்டத்தில் பேண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விரிவாக்க நிலதாரிகள் மற்றும் தேயிலை விவசாயிகளின் விகிதம் 1:1000 ஆக காணப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டில் சிறு தேயிலைத் தோட்ட பிரிவின் விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் மற்றும் தேயிலை விவசாயிகளுக்கான விகிதம் 1:3210 ஆகக் காணப்பட்டது. | | |
| (இ) | அதிகாரசபையினால் நடாத்திச் செல்லப்படும் நிறுவனத்தின் தேயிலை நாற்று மேடைகளை ஆகக் குறைந்த உற்பத்திக்காக செலவிடப்பட்ட செலவினத்தையேனும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த தேயிலை நாற்று மேடைகள் முகாமைத்துவம் மதியுரை கோவையில் அறிமுகப் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போழுதிலும் மாறவில, நெல்லிகொள்ள, வோகன் மற்றும் ஹடில ஆகிய நாற்று மேடைகளின் வருமானம் செலவினத்தை தீர்ப்பதற்கேனும் போதுமானதாக காணப்படவில்லை. நாற்று மேடை முகாமைத்துவ மதியுரை கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் தேயிலை நாற்று மேடைகளின் தேயிலை கன்றுகள் காய்ந்து போகும் சதவீதம் 10 சதவீதத்திற்கு குறைவான மட்டத்தில் பேணப்பட வேண்டிய போதிலும் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக நெல்லிகொள்ள மற்றும் வளஹன்துவ தேயிலை நாற்று மேடைகளில் கன்றுகளின் அழிவானது 17 சதவீதமாக காணப்பட்டது. | சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை தேயிலை நாற்று மேடைகளை நடாத்திச் செல்வதற்கு இலாபம் ஈட்டுதல் எனும் வியாபார நோக்கில் அல்ல என்பதும் முழுமையாக தேயிலை கைத்தொழிலினை நிலையாக பேணுவதற்கு தேவையான தரமான கன்றுகளின் உற்பத்திக்கே ஆகும். அங்கீகரிக்கப்பட்ட கன்றுகள் அழிவடையும் சதவீதம் 10 சதவீதமான போதிலும் பல்வேறுபட்ட கட்டுப்பாட்டை மீறிய மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட காரணங்களின் அடிப்படையில் கன்றுகளின் அழிவு உயர்வடைய கூடும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் இவ்வாறான நாற்று மேடைகள் தொடர்பில் செயல் நடவடிக்கை எடுக்கும் போது சிறந்த கண்காணிப்பு மற்றும் கவனத்துடன் நடவடிக்கை எடுக்கப்படும். ஏதேனும் சந்தர்ப்பம் ஒன்றில் கவனயீனமாக அல்லது ஊழியர்களின் கவனயீனத்தின் அடிப்படையில் நிறுவனத்தின் நாற்று மேடைகள் நட்டம் ஈட்டினால் அது தொடர்பில் ஒழுக்காற்று அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நாற்று மேடை முகாமைத்துவ மதியுரை கோவையை பின்பற்ற வேண்டியதுடன் புதிய மாற்றுத்திட்டத்தின் மூலம் கன்றுகள் அழிவடையும் சதவீதத்தினை குறைவான மட்டத்தில் பேண நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்கங்களை பதிவு செய்தல், நிர்வகித்தல் மற்றும் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு மானியங்களை வழங்குதல் அதிகார சபையின் பணிப் பொறுப்பாவதுடன் மீளாய்வாண்டில் அதற்காக ரூபா.2,076,761 செலவிடப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் காணப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 1,475 இலிருந்து 2021 ஆம் ஆண்டில் 1,484 வரை அதிகரித்திருந்த போதிலும் சங்கங்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையிலும் முறையே 329,963 இலிருந்து 279,594 வரையிலும் 50,369 இனால் அதாவது 15 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. | 2018 ஆம் ஆண்டு முதல் சங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்தவாறு காணப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் காணப்பட்ட அதிக வறட்சி நிலைமை மற்றும் இதுவரையிலும் நிலவும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையினுள் காணப்பட்ட போக்குவரத்து கட்டுப்பாடுகள், உரம், கிருமிநாசினி போன்றவற்றின் விலை உயர்வடைந்த காரணத்தால் பொருளாதார மற்றும் சமூக தாக்கங்கள் மற்றும் அரசியலமைப்பின் மூலம் விதிக்கப்பட்ட வருடாந்த சங்க அங்கத்துவ கட்டணம் ஆகியவற்றை சங்கத்திற்கு செலுத்தாமையால் அங்கத்துவம் குறைத்து காண்பிக்கப்படல் போன்ற விடயங்கள் காரணமாக இதுவரையிலும் சங்கங்களின் செயல்படு நிலைமை நலிவான போக்கினை காண்பிப்பதாக அவதானிக்கப்பட்டது. | சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்கங்களின் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (உ) | இலங்கை தேயிலை சபையின் நிதி ஏற்பாட்டின் ஊடாக 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 25 மில்லியன் தேயிலை கன்று விசேட செயற்திட்டத்திலிருந்து தேயிலை துறையின் தரம் மற்றும் நியமத்திற்கமைவான கிளை தேயிலை கன்று உற்பத்திக்காக நாற்று மேடையாளர்களை ஊக்குவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதற்கமைய தேயிலை கன்றுகளின் இயலளவோ 25,000 ஆன கன்று உற்பத்தி நாற்று மேடையாளர்களுக்காக ரூபா.100,000 மற்றும் ஏனைய படிகளும் | 25 மில்லியன் தேயிலை கன்றுகள் விசேட செயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட நாற்று மேடையாளர்களிடையே நலன்களை வழங்கி செயல்படாத நாற்று மேடையாளர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பிரதேச முகாமையாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதற்காக பிரதேச முகாமையாளர்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதுடன் அவ்வாறு மீள பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி | பொருத்தமான நாற்று மேடையாளர்களுக்கு நலன்களை வழங்குவதற்கும் மேற்பார்வை மட்டத்தினை அதிகரித்து அதன் மூலம் செயற்திட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு உரிய வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேயிலை கன்று இயலளவு 50,000 ஆன கன்று உற்பத்தி நாற்று மேடையாளர்களுக்கு ரூபா.200,000 மற்றும் வேறு படிகளும் வழங்கப்பட்டு இருந்தது. எவ்வாறான போதிலும் 2020 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் 781 நாற்று மேடைகளில் 207 நாற்று மேடைகள் அதாவது 26 சதவீதம் செயற்படு நிலைமையில் காணப்படவில்லை. அவ்வாறே இறுதி பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நாற்று மேடைகளின் எண்ணிக்கை 82 ஆகும். அதற்கமைய நிதி உதவிகள் மற்றும் பண்ட உதவிகளைப் பெற்றுக் கொண்ட 781 நாற்று மேடையாளர்களுக்கிடையே வெற்றிகரமாக நாற்று மேடைகளை பேணி செல்வோரின் எண்ணிக்கை 82 ஆக காணப்பட்டதுடன் அது மொத்த நாற்று மேடைகளின் எண்ணிக்கையில் 10 சதவீதம் மாத்திரம் ஆகும். | உதவிகள் மற்றும் பண்ட உதவிகளுக்கு புதிய நாற்று மேடையாளர்களை தெரிவு செய்து அவர்களுக்கு அந்த நிதி உதவிகள் மற்றும் பண்ட உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | |
| (ஊ) | கண்டி, காலி மற்றும் மாத்தறை பிரதேச அலுவலகங்களுக்கு உரிய கிளை தேயிலை கன்றுகளுக்கு செலுத்த வேண்டிய வைப்புக்களாக 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபா.1,643,614 நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அவை 2008 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் ஆகும். இவை கணக்குகளில் நீண்ட காலம் முன்கொண்டு வரப்பட்டவை என்பதுடன் இவற்றை விவசாயிகளிடமிருந்து உரிய முறையில் | கண்டி, காலி மற்றும் மாத்தறை அலுவலகங்களினால் மானிய தொகையினை செலுத்தும் போது கன்றுகளுக்கு உரிய பணம் கழிக்கப்பட்டு அந்த அளவிற்கு கன்றுகள் வழங்கப்பட வேண்டும். எனினும் நாற்று மேடைகளின் இயலளவுக்கமைய வழங்கப்பட வேண்டிய அளவுகளில் குறைத்து வழங்கப்பட்ட காரணத்தால் 2008 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் விவசாயிகளுக்கு செலுத்த வேண்டிய அளவாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய வைப்புக்களை ஒப்பிட்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் ஒப்பிடப்பட்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (எ) | களுத்துறை பிரதேச அலுவலகத்தின் ஊழியர் ஒருவருக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அறவிடமுடியாத ரூபா.1,093,035 ஆதன கடன்மீதி ஒன்று காணப்படுவதுடன் அதிகார சபையினால் வீட்டுக்கடன் வழங்கும் போது கடன் வழங்குவதற்கு முன்னர் கடன்கோருனரின் காப்புறுதியினை கொள்ளாமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த கடனாளர் 2014 ஜனவரி 03 ஆம் திகதி மரணம் அடைந்த பின்னர் கடனை அறவிடுவதற்கு முன்னர் அற்றோணி அதிகார பத்திரம் இரத்து செய்யப்பட்டு உரித்துறுதியை மீள வழங்குதல் இடம்பெற்றுள்ளதுடன் இந்த தவறுக்கு பொறுப்பு கூறவேண்டிய உத்தியோகத்தர்களை இனங்காணுவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதிகார சபையின் வீடமைப்பு கடன் முறைமை ஊழியர்களினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சுழற்சி நிதியம் ஒன்றின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. அதற்கமைய அதிகார சபையின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டுக் கடன்தொகை ஊழியர் மரணம் அடைந்த பின்னர் காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் செலுத்தாமையின் அடிப்படையில் ஊழியருக்கு ஏற்படும் தாக்கத்தினை தடுப்பதற்கு தொழில்சார் சங்கங்களால் கோரப்பட்ட குறித்த ஆதனத்தின் அற்றோணி அதிகாரம் தலைவரின் கட்டளைக்கமைய விடுவிக்கப்பட்டுள்ளது. குறித்து வீட்டுக் கடன் நடைமுறை ஊழியர்களால் ஏற்படுத்தப்பட்ட சுழற்சியான நடைமுறை ஒன்றின் கீழ் செயல்படுத்தப்படுகின்றமை யால் ரூபா.20 இலட்சம் வரையான தொகை அரச வீட்டுக் கடன் வழங்கும் நடைமுறைகளில் இருந்து விலகி நிறுவன சுற்றறிக்கையின் அடிப்படையில் செயற்படுத்தப்படும். அதற்கமைய இந்த வீட்டுக் கடன் நிதியத்தில் அரசினது எந்த பணமும் காணப்படவில்லை. | ஆதனக்கடனை அறவிடுதல் தொடர்பில் தாபன விதிக்கோவை மற்றும் உரிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3.3 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உஸ்செவன கன்று உற்பத்தி விசேட நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு உஸ்செவன கன்றுகளின் 1.2 மில்லியன் இலவசமாக பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இதற்காக பிரதேச அலுவலகங்களுக்கு ரூபா.20,000,000 ஆன நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் இழைய நடுகைக்கான பொருட்களை பெற்றுக் கொள்வதில் நிலவிய சிரமங்கள் காரணமாக ஒட்டு போடப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை 623,478 மாத்திரமாகும். அவ்வாறே ஏற்பாடு செய்யப்பட்ட தொகையில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ள படியாக ரூபா.17,085,356 பயன்படுத்தப்பட்டிராததுடன் அது 85 சதவீதமாகும். | நிலவும் காலநிலை மாற்றங்களுக்கு முகம் கொடுப்பதற்கு உஸ்செவன நிறுவுவதற்கு கால அடிப்படையிலான மற்றும் அத்தியாவசியமான நிகழ்ச்சித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கமைய நிகழ்ச்சி திட்டத்தினை திட்டமிட்டத்துடன் கன்றுகளின் விநியோகம் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் 2021 மே மாதம் மீண்டும் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் இந்த கன்றுகளை விநியோகிக்க முடியாது என அறிவித்திருந்தது. அதற்கமைய அந்த நாள் முதல் இளைய நடுகைக்காண பொருட்களை பிரதேச வாரியாக கொள்வனவு செய்து மாத போகத்தில் ஒட்டு போடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆண்டின் இறுதி அளவில் 8 இலட்சம் கன்றுகளை உற்பத்தி செய்ய முடியுமானதாக இருந்தது. அதற்கு அமைய 2022 பெரும் போகத்தில் உஸ்செவன கன்றுகள் நலனாளிகளுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். | சரியானதும் நடைமுறைக்கு சாத்தியமானதுமான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிதியேற்பாட்டினை ஆக்கபூர்வமாகவும் செயல் திறனாகவும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சமுர்த்தி அல்லது குறைந்த வருமானம் உடைய இரண்டு லட்சம் குடும்பங்களை கணக்கிட்டு முழுமையான மனை சார் பொருளியல் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்திற்கு சமுர்த்தி, மனைப் பொருளியல், நுண்நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க | இந்த செயற்திட்டத்திற்காக ரூபா.25 மில்லியன் தொகை 2021 அக்டோபர் மாதத்தில் மேலும் ரூபா.25 மில்லியன் 2021.12.16 ஆம் திகதி கம்பனி தோட்ட மறு சீரமைப்பு, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத்தை அண்மிய பயிர்களின் மற்றும் தொழிற்சாலை நவீன மயப்படுத்தல் மற்றும் | செயற்திட்ட பணத்தை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் திட்டமிடப்பட்ட பணிகளுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அமைச்சுக்கு ரூபா.50 மில்லியனான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் முதலீட்டினை மேம்படுத்துவதற்கு சிறு தேயிலைத் தோட்டங்களில் பயிரிடும் குறைந்த வருமானம் உடைய விவசாயிகளுக்கு கோழி குஞ்சு வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு ஆகியவற்றுக்கு உரிய நிதி உதவிகளை வழங்குவதற்கு மற்றும் சிறு தேயிலை தோட்டங்கள் தொடர்பில் நிலத்தின் பயன்பாட்டினை உச்சப்படுத்துவதற்கு இடைபயிர்களின் கன்றுகளை வழங்குதல் அடிப்படை பணியான போதிலும் அதிகார சபைக்கு கிடைத்திருந்த தொகையில் ரூபா.16,502,442 அதாவது 33 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ள படியாக பயன்படுத்தப்படாது தலைமை அலுவலகத்திலும் பிரதேச அலுவலகங்களிலும் எஞ்சியிருந்தது. | தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் ஊடாக சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது தேனீ வளர்ப்புக்கு தேனீ வளர்ப்பு பெட்டிகளை வழங்கியுள்ள போதிலும் தேனீ வளர்ப்புக்குரிய குழுக்களை இதுவரையிலும் நலனாளிகளுக்கு வழங்குவதற்கு உள்ள இயலுமையானது மாதம் ஒன்றிற்கு ஆகக் கூடியது ஆறு குழுக்கள் மாத்திரம் ஆகும். அவ்வாறே கோழி வளர்ப்பில் ஈடுபட்ட நலனாளிகள் கோழிக்கோடுகளை அமைப்பதற்கு உரிய தொகையினை வழங்கி கோழிக்குஞ்சுகளை வழங்கும் போது அந்த குஞ்சுகள் கட்டளையிடப்பட்டு சுமார் ஒன்றரை மாத காலம் வழங்குனர்களின் பண்ணைகளில் போசிக்கப்பட வேண்டும். இந்த விடயங்களின் காரணமாக இந்த செயற்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு சுமார் ஆறு மாத காலம் கடந்துள்ளது. எவ்வாறான போதிலும் தற்போது இந்த செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட அனைத்து பணமும் செலுத்தப்பட்டுள்ளது. | |

### 3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட முன்மொழிவின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட ரூபா.250 மில்லியன் தொகை | 2019 ஆம் ஆண்டின் இறுதி காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் இடம் பெற்றமையால் விவசாய உபகரணங்களை | விவசாய உபகரணங்களை விவசாயிகளுக்கு துரிதமாக |

| | | |
|---|---|---|
| அவ்வப்போது பெருந்தோட்ட அமைச்சு மற்றும் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையினால் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா.97,596,842 பெறுமதியான தண்ணீர் மோட்டர்கள், திரவம் தெளிக்கும் இயந்திரங்கள், முள்ளு, மண்வெட்டிகள், அளவாங்கு, கவ்வாத்து கத்திகள் மற்றும் ஹோஸ் குழாய்கள் போன்ற பயன்படுத்தாத சுமார் 7658 விவசாய உபகரண அலகுகள் 2022 டிசம்பர் 27 ஆம் திகதி தலைமை அலுவலகத்தில் மற்றும் பிரதேச அலுவலகங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது . இந்த இருப்பு உறுப்படிகள் நீண்ட காலமாக பயன்படுத்தாது களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் அவற்றின் உத்தரவாத காலம் மீறப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. | பகிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்படாததுடன் 2020 ஆம் ஆண்டில் இந்த விவசாய உபகரணங்களை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடுகள் காரணமாக அந்த விவசாய உபகரணங்களை பகிர்ந்தளித்து நிறைவு செய்ய முடியாதிருந்தது. பின்னர் 2021.11.16 ஆம் திகதிய அனைத்து விவசாய உபகரணங்களும் பகிர்ந்தளிப்பதற்கு தலைவரின் அங்கீகாரத்திற்கமைய பிரதேச அலுவலகங்கள் அறிவுறுத்தப்பட்டன. தலைமை அலுவலகத்தின் களஞ்சியத்தில் 496 தண்ணீர் மோட்டர்கள் மற்றும் 153 திரவம் தெளிக்கும் இயந்திரங்கள் எஞ்சி இருந்தன. அந்த விவசாய உபகரணங்களும் 2022.08.31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்டு சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டெரு மூலப்பொருள் துண்டாக்கும் இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு 2006 பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.8.4 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்காத அதிகாரசபையின் | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.8.5 (ஆ) பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு ஒன்றின் தேவைப்பாடு தொடர்பில் திணைக்களத்தின் தலைவரினால் தீர்மானிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இயந்திரம் ஒன்றின் ஆரம்ப | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

முகாமையாளர் (அபிவிருத்தி) இனால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைப்பு குறிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு கூட்டெரு உற்பத்தி ஆரம்பிப்பதற்கு 08 கூட்டெரு மூலப்பொருள் துண்டாக்கும் இயந்திரங்கள் இலங்கை அரசின் வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்திலிருந்து நேரடி ஒப்பந்த முறைமையை பயன்படுத்தி ரூபா.2,300,000 ஆன தொகைக்கு 2021 ஜுன் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு இருந்ததுடன் 2021 அக்டோபர் 28 ஆம் திகதி கூடிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் இந்த பெறுகைக்கு எதுவித பங்களிப்பும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்தின் மூலம் 08 அலுவலகங்களில் இருந்து உற்பத்திக்கு எதிர்பார்க்கும் கூட்டெரு உற்பத்தியின் அளவு மாதாந்தம் 05 மெட்ரிக்தொன்கள் படியாக 40 மெட்ரிக்தொன்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் தேவைப்பாட்டிற்கு பொருத்தமான மற்றும் போதிய இயலளவு ஒன்று இல்லாத இயந்திரங்களை கொள்வனவு செய்தமையால் 07 மாத காலத்தினுள் 37 மெட்ரிக்தொன் இருப்பு மாத்திரம் கொள்வனவு

அமைப்பு குறிப்பீடுகள் என்ன என்பது தொடர்பில் கூட்டெரு, அதிகார சபையினால் உற்பத்தி செய்யும் நடைமுறை நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி பிரிவின் முகாமையாளர் (அபிவிருத்தி) இனால் மிகவும் இலகுவான முறையில் பராமரிக்க கூடிய மாதிரிக்கமைந்த கூட்டெரு உற்பத்தி இயந்திரம் ஒன்றின் அமைப்பு குறியீடுகளை பெற்றுக்கொண்டு குறித்த இயந்திரத்தினை இலங்கை பல்வேறு சட்ட கூட்டுத்தாபனங்களின் மூலம் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

செய்யப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேயிலை கன்று செய்கைக்கு தேவையான நைட்ரஜன், பொட்டாசியம் மற்றும் பொஸ்பரஸ் ஆகிய உள்ளீடுகள் அடங்கிய உரத்தினை அரசின் கட்டுப்பாட்டு விலைக்கு கொள்வனவு செய்து பகிர்ந்தளித்து விவசாயிகளிடமிருந்து அந்த பணத்தை மீளளிப்பு செய்து கொள்ளும் அடிப்படையில் தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் 07 இடமிருந்து 1,255 மெட்ரிக்தொன் உரம் ரூபா.37,650,00 இற்கு அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டு கோவையின் 8.12.3 ஆம் பிரிவின் பிரகாரம் பொருட்கள் கிடைத்த பின்னர் நிலையத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரால் வழங்கப்படும் பொருட்கள், அமைப்பு குறிப்பீடுகள் மற்றும் ஏனைய இணங்கிய விதிகளுக்கு அமைய உள்ளமைக்கு பொருட்பெறுவனவு சான்றிதழ் ஒன்று வழங்கப்பட வேண்டிய போதிலும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு பிரதேச அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபாய்.18.1 மில்லியன் பெறுமதியான 605 மெட்ரிக்தொன் உரம் குறித்த நியமச் சான்றிதழ் மற்றும் பிரதேச அலுவலகங்களில் இருந்து விநியோகிக்கப்பட்ட பொருள் பெறுவனவு | தேயிலை கன்றுகளின் வளர்ப்பிற்கு T-200 மற்றும் T-65 உரங்களின் விலையை கட்டுப்படுத்தி பிரதேச அலுவலகங்களுக்கு உர கம்பனிகளிடமிருந்து நேரடியாக விநியோகிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய உரத்தின் அளவுகளின் பிரகாரம் பிரதேச அலுவலகங்களினால் பொருட்பெறுவனவு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன. அந்த உரம் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களிடமிருந்து பணம் அறவிடப்பட்ட பின்னர் வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். அதற்கமைய பிரதேச அலுவலகங்களில் இருந்து சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு விற்பனை செய்தமையால் சேகரிக்கப்பட்ட பணம் தலைமை அலுவலகத்திற்கு நிலுவையின்றி தீர்க்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | உரம் அமைப்பு குறிப்பீடுகளுக்கு அமைவாக உள்ளமை மற்றும் இருப்பு கிடைத்தமை தொடர்பில் பிரதேச அலுவலகங்களினால் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சான்றிதழ்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் இந்த உரத்தினை பெற்றுக் கொண்டமை மற்றும் பகிர்ந்தளித்தமை தொடர்பில் கணக்காய்வில் பரிசோதிக்க முடியாதிருந்தது. | | |
| (இ) | டொலமைட் 300 கிலோகிராம் இலவசமாக வழங்கும் நோக்கில் அதிகார சபையில் 2021 வரவு செலவுத் திட்ட ஏற்பாட்டின் கீழ் 13,000 மெட்ரிக்தொன் டொலமைட் இலங்கை அரச பொறியல் கூட்டுத்தாபனத்திலிருந்து ரூபா.101,762,000 தொகைக்கு கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2006 பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 8.9.3(ஆ) பிரிவின் பிரகாரம் முறையான உடன்படிக்கை கைச்சாத்திரப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் அபிவிருத்தி செலவினமாக இந்த முழு தொகையும் அதாவது போக்குவரத்து செலவினங்களும் உள்ளடங்களாக ரூபா.101,762,000 உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 2022 மே 31 ஆம் திகதி அளவிலும் குறித்த பிரதேச அலுவலகங்களுக்கு ரூபா.2,132,000 பெறுமதியான 533 மெட்ரிக்தொன் டொலாமைட் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த கட்டளையிடப்பட்ட அளவில் 4 சதவீதம் | பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய டொலமைட் அளவு மிகவும் உயர்ந்த கட்டளையொன்று என்பதால் அந்த மொத்த கட்டளையும் விநியோகிக்க கூடிய வழங்குநரை கண்டறிவது சிரமமானதாக காணப்பட்டதுடன் அவரால் உயர்வான விலைகள் முன்வைக்கப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய ஆகக் குறைந்த விலைகளின் கீழ் டொலமைட் விநியோகிக்கும் அரச நிறுவனம் ஒன்றான இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் இருந்து ஆகக் குறைந்த விலையின் கீழ் டொலாமைட் கொள்வனவு செய்வதற்கு கட்டளை அளிக்கப்பட்டது. டொலாமைட் விநியோகிக்கப்படும் அளவிற்கு கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் கொடுப்பனவினை மேற்கொண்டு எந்தவித நிதி அபாயத்தினையும் அதிகார சபை ஏற்காத வகையில் டொலமைட்டினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர் சங்கங்களால் போக்குவரத்திற்கு செலவாகும் மேலதிக தொகையினை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களிடமிருந்து | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் உரிய உடன்படிக்கையொன்று கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் டொலாமைட் விநியோகம் மற்றும் பகிர்ந்தளிப்பு செயற்திறனாகவும் ஆக்கபூர்வமானதாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மாத்திரம் ஆகும். அதற்காக போக்குவரத்து செலவினம் ரூபா.2,062,350 ஆகக் காணப்பட்டதுடன் தொடர்ந்தும் விநியோகிக்கப்பட வேண்டிய 12,467 மெட்ரிக்தொன் அளவு காணப்படுகிறது. அதற்கான விநியோகம் தாமதம் அடைந்த காரணத்தால் எதிர்காலத்தில் பெருமளவிலான மேலதிக போக்குவரத்து கிரயத்தினை மேற்கொள்ள நேரிடும் என்பதும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | அறவிட்டு உரிய நிறுவனத்திற்கு செலுத்தி போக்குவரத்தினை மேற்கொள்ள சங்கங்கள் இணங்கியுள்ளன. அதற்கமைய மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட வலய தேயிலை அபிவிருத்தி விரிவாக்க உத்தியோகத்தர் மற்றும் தேயிலை பரிசோதகர் விரிவாக்க உத்தியோகத்தர் ஆகியோரின் எண்ணிக்கை முறையே 26 மற்றும் 144 ஆன போதிலும் நிரந்தர உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை முறையே 17 மற்றும் 124 ஆகும். அதற்கமைய தேயிலை விவசாயிகள் மற்றும் சங்கங்கள் தொடர்பில் நேரடி தொடர்பினை பேணும் இந்த உத்தியோகத்தர்களில் ஏற்படும் வெற்றிடத்தினை நிரப்பாமை அதிகார சபையின் மானிய நிகழ்ச்சி திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்தல் தொடர்பில் நேரடியாக தாக்கம் அளிக்கும் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டின் தேர்தல் காலப் பகுதி அறிவிக்கப்பட்டிருந்தமையின் அடிப்படையில் நிதி அமைச்சின் DMS/Policy/Recruitments ஆம் இலக்க 2019.11.20 ஆம் திகதிய கடிதத்தில் அறிவுரைகளுக்கு அமைய ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு உரிய மேலதிக நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையால் தேயிலை பரிசோதகர் விரிவாக்க உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புதல் தாமதமடைந்துள்ளதுடன் வலய தேயிலை அபிவிருத்தி விரிவாக்க உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு உரிய தேயிலை பரிசோதகர் விரிவாக்க உத்தியோகத்தர்கள் சிலர் தொடுத்துள்ள வழக்கின் காரணமாக அதற்குரிய ஆட்சேர்ப்புகளை | அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமான பதவிகளுக்கு உரிய ஆட்சேர்ப்புகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டியதுடன் தேவைக்கேற்ப பதவியணியில் திருத்தங்களை மேற்கொண்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ள முடியாதுள்ளது. | |

## 3.7 வாகனக் கட்டமைப்பு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகைகள் நடைமுறையில் இருந்து விலகி பழுதுபார்த்தல் பணிகளுக்காக 52-2605 இலக்கமுடைய கேப் வண்டி 2016 பெப்ரவரி 23 ஆம் திகதிய 19468 ஆம் இலக்க கட்டளை இலக்கத்தில் நாவலபிட்டியவில் அமைந்துள்ள கராஜிற்கு கையளிக்கப்பட்ட பின்னர் 2019 ஆம் ஆண்டில் அந்த வாகனத்தின் உதிரிப்பாகங்கள் அகற்றப்பட்டு சேதமாக்கப்பட்டு தலைமை அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதிகார சபையினால் அது தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கும் கராஜ் உரிமையாளருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 52-2605 இலக்கமுடைய வாகனம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கை எடுக்க தளங்கம போலீஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று தொடுக்கப்பட்டுள்ளதுடன் அதன்போது குறித்த கராஜ் அமைந்துள்ள பிரதேசத்தின் போலீசில் முறைப்பாடு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கமைய குறித்த முறைப்பாடு தலைமை அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் துரிதமாக தொடுக்கப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கும் கராஜ் உரிமையாளருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |